தினமணி (20.02.2024)

## செய்திக் கதம்பம்

# கரூர் மாவட்ட தீயணைப்புத் துறைக்கு ரூ. 3.50 லட்சம் மதிப்பில் உபகரணங்கள்

## டிஎன்பிஎல் ஆலை வழங்கியது



கரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை அலுவலர் வடிவேலிடம் மீட்புபணிக்கான உபகரணங்களை திங்கள்கிழமை வழங்கிய மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன். உடன் டிஎன்பிஎல் ஆலையின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவகுமார் உள்ளிட்டோர்.

**கரூர், பிப்.19:** டிஎன்பிஎல் ஆலை சார்பில் கரூர் மாவட்ட தீயணைப்புத்துறையினருக்கு ரூ.3.50 லட்சம் மதிப்பில் மீட்புபணிக்கான உபகரணங்கள் திங்கள்கிழமை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம் புகளூர் காகித ஆலையின் சமுதாய நலப்பணிகள் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறைக்கு மீட்பு பணி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆலையின் முதன்மை மேலாளர்(மனிதவளம்) சிவகுமார் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் ரூ.3.50 லட்சம் மதிப்பிலான தீயணைப்பு மீட்புப் பணி உபகரணங்களை மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை அலுவலர் வடிவேலிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையின் உதவி அலுவலர் மா.சந்திரகுமார் மற்றும் காகித ஆலை அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தினத்தந்தி (20.02.2024)



தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம்

# தீயணைப்பு நிலையங்களுக்கு ரூ.3½ லட்சத்தில் உபகரணங்கள்

கரூர், பிப்.20-

கரூர் மாவட்டத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் சமூக பொறுப்பு நிதியிலிருந்து சிறப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த உபகரணங்களை மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன் தீயணைப்பு அலுவலர்களிடம் வழங்கினார். இதில் 4 எண்ணிக்கை கொண்ட பி.எஸ்.சி. பவர் மரத்தை அறுக்கும் எந்திரம் ரூ.29,661 மதிப்பீட்டிலும், 4 எண்ணிக்கை கொண்ட போஷ் கான்கிரீட் கட்டர் மற்றும் பிளேடுகளுடன் ரூ.19,174 மதிப்பீட்டிலும், 4 எண்ணிக்கை கொண்ட நெப்டியூன் மின்கல தெளிப்பான் ரூ.11,864 மதிப்பீட்டிலும், 8 எண்ணிக்கை கொண்ட பாம்பு பிடிக்கும் கருவி ரூ.24,271 மதிப்பீட்டிலும், 2 எண்ணிக்கை கொண்ட கயிறு ஏணி ரூ.22,033 மதிப்பீட்டிலும், 6 எண்ணிக்கை கொண்ட டார்ச் லைட் ரூ.17,756 மதிப்பீட்டிலும் வழங்கப்பட்டன. இதேபோல் 8 எண்ணிக்கை கொண்ட பாதுகாப்பு பட்டை அதிர்ச்சி தாங்குபவை ரூ.11,864 மதிப்பீட்டிலும், 4 எண்ணிக்கை கொண்ட ஹோண்டா பெட்ரோல் பம்ப் ரூ.99,324 மதிப்பீட்டிலும், 150 கிலோ கொண்ட 1 நைலான் கயிறு ரூ.40,179 ஆயிரம் மதிப்பீட்டிலும், 115 கிலோ கொண்ட 1 நைலான் கயிறு ரூ.30,803 மதிப்பீட்டிலும், 10 எண்ணிக்கையிலான உபகரணங்கள் என மொத்தம் ரூ.3½ லட்சம் மதிப்பிலான பொருட்களை தீயணைப்புத்துறை அலுவலர்களிடம் மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார். இந்தநிகழ்ச்சியில் மாவட்ட தீயணைப்பு அலுவலர் வடிவேல், உதவி தீயணைப்பு அலுவலர் திருமுருகன், சந்திரகுமார் அரசு அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தினகரன் (20.02.2024)**

கரூர் மாவட்டத்தில்

# தீயணைப்பு நிலையங்களுக்கு சிறப்பு உபகரணங்கள்



கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் தீயணைப்பு நிலையங்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் மூலம் சமூக பொறுப்பு நிதியிலிருந்து சிறப்பு உபகரணங்களை மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன் வழங்கினார்.

## டிஆர்ஓ வழங்கினார்

கரூர்,பிப்.20: கரூர் மாவட்டத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் சமூக பொறுப்பு நிதியில் இருந்து சிறப்பு உபகரணங்களை மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், தீயணைப்பு அலுவலரிடம் வழங்கினார்.

கரூர் மாவட்டத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் மூலம் சமூகபொறுப்பு நிதியில் இருந்து சிறப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில், 4 எண்ணிக்கை கொண்ட பிஎஸ்சி பவல் 6,258 மர அறுக்கும் இயந்திரம் ரூ.29,661 மதிப்பிலும், 4 எண்ணிக்கை கொண்ட போஷ் கான்கிரீட் கட்டர் 750, 100 மற்றும் பிளேடுகளுடன் ரூ.19,174 மதிப்பிலும், 4 நெப்டியூன் மின்கல தெளிப்பான் ரூ.11,864 மதிப்பிலும், 8 பாம்பு பிடிக்கும் கருவி ரூ.24,271 மதிப்பிலும், 6 கயறு ஏணி ரூ.22,033 மதிப்பிலும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, 6 டார்ச் லைட் ரூ.17756 மதிப்பிலும், 8 பாதுகாப்பு பட்டை அதிர்ச்சி தாங்குபவை ரூ.11864 மதிப்பிலும், 4 ஹோண்டா பெட்ரோல் பம்ப் ரூ.99,324 மதிப்பிலும், 150 கிலோ கொண்ட 1 நைலான் கயறு 220 மீட்டர் ரூ. 40179 மதிப்பிலும், 115 கிலோ கொண்ட நைலான் கயறு 220 மீட்டர் ரூ.30,803 மதிப்பிலும், 10 எண்ணிக்கையிலான உபகரணங்கள் ரூ.3லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் மாவட்ட வருவாய் அலுவலர் தீயணைப்புத்துஜற அலுவலர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட தீயணைப்பு அலுவலர் வடிவேல், உதவி தீயணைப்பு அலுவலர் திருமுருகன், சந்திரகுமார் உட்பட அனைவரும் கலந்து கொண்டனர்.

## காலைக்கதிர் (21.02.2024)



கரூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில், டி.என்.பி.எல்., நிறுவனம் சார்பில், தீயணைப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு உபகரணங்கள்.

# தீயணைப்பு நிலையங்களுக்கு சிறப்பு உபகரணங்கள் வழங்கல்

கரூர், பிப். 21-

கரூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில், புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில், மாவட்ட தீயணைப்பு நிலையங்களுக்கு சிறப்பு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

டி.ஆர்.ஓ., கண்ணன் தலைமை வகித்தார். நான்கு எண்ணிக்கை கொண்ட பி.எஸ்.சி., பவர் மர அறுக்கும் இயந்திரம், 4, போஸ் கான்கிரீட் கட்டர், 4, நெப்டியூன் மின்கல தெளிப்பான், 8, பாம்பு பிடிக்கும் கருவி, 2 கயிறு ஏணி, ஆறு எண்ணிக்கை கொண்ட டார்ச் லைட், 8 எண்ணிக்கை கொண்ட பாதுகாப்பு பட்டை, 4 எண்ணிக்கை கொண்ட ஹோண்டா பெட்ரோல் பம்ப் என மொத்தம், 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட தீயணைப்பு அலுவலர் வடிவேல், உதவி தீயணைப்பு அலுவலர் திருமுருகன் சந்திர குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தினமலர் (22.02.2024)**



கரூர் மாவட்ட தீயணைப்பு நிலையங்களுக்கு டிஎன்பிஎல் சமூக பொறுப்பு நிதியிலிருந்து பெறப்பட்ட சிறப்பு உபகரணங்களை டிஆர்ஓ கண்ணன் மாவட்ட தீயணைப்பு அலுவலரிடம் வழங்கினார்.

# தீயணைப்பு நிலையங்களுக்கு நவீன உபகரணங்கள் வழங்கல்

**வேலாயுதம்பாளையம், பிப். 22–**

*கரூர் மாவட்டத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு சிறப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.*

தமிழ்நாடு - செய்தித்தாள், காகித நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து 4பி.எஸ்.சி பவர் மரம் அறுக்கும் இயந்திரம், போஷ் காங்கிரிட் கட்டர்பிளேடுகளுடன், நெப்டியூன் 'மின்கல தெளிப்பான், பாம்பு பிடிக்கும் கருவி, கயிறு ஏணி என மொத்தம் ரூ. 3 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான பொருட்கள் கரூர் மாவட்ட தீயணைப்பு நிலையங்களுக்கு டிஆர்ஓ கண்ணன் தீயணைப்பு துறை அலுவலர்களிடம் வழங்கினார். தீயணைப்பு அலுவலர் வடிவேல், உதவி தீயணைப்பு அலுவலர் திருமுருகன், சந்திரகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தி இந்து தமிழ் திசை 21–02–2024



கரூர் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கரூர் மாவட்ட தீயணைப்பு அலுவலர் ச.வடிவேலுவிடம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி உபகரணங்களை வழங்கிய காகித நிறுவனத்தின் முதன்மை மேலாளர்(மனித வளம்) கே.எஸ்.சிவக்குமார்.

# கரூர் தீயணைப்பு நிலையங்களுக்கு டிஎன்பிஎல் சார்பில் சிறப்பு உபகரணங்கள்

● கரூர்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (டிஎன்பிஎல்) சமுதாய பணிகளில் ஒரு பகுதியாக, கரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களுக்கு ரூ.3.50 லட்சத்தில் மீட்புப்பணி உபகரணங்களை வழங்கும் நிகழ்ச்சி, கரூர் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன் முன்னிலையில், காகித நிறுவனத்தின் முதன்மை மேலாளர்(மனித வளம்) கே.எஸ்.சிவக்குமார் ரூ.3.50 லட்சத்தில் புதிதாக வாங்கப்பட்ட தீயணைப்பு மீட்புப்பணி உபகரணங்களை, கரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய அலுவலர் ச.வடிவேலுவிடம் வழங்கினார். தீயணைப்பு நிலைய உதவி மாவட்ட அலுவலர் மா.சந்திரகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மாலை மலர்

திருச்சி 20-2-2024 (செவ்வாய்க்கிழமை)

TRICHY 20-2-2024 (TUESDAY)

## புகளூர் காகித ஆலை நிறுவனம் சார்பில்

# தீயணைப்பு - மீட்பு துறை அலுவலகத்திற்கு ரூ.3.50 லட்சம் மதிப்பிலான உபகரணங்கள்

வேலாயுதம்பாளையம், பிப்.20—

கரூர் மாவட்டம் புகளூர் செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் கரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறைக்கு மீட்பு பணி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் தமது சமுதாய பணிகளில் ஒரு பகுதியாக சமுதாய நலப் பணிகள் திட்டத்தின் சார்பில் கரூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை அலுவலகத்திற்கு ரூ. 3.50 லட்சம் செலவில் மீட்பு பணி உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன் முன்னிலையில் காகித ஆலை நிறுவனத்தின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவகுமார் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை அலுவலர் வடிவேலிடம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் சந்திரகுமார், வேலாயுதம் பாளையம் தீயணைப்பு நிலைய அலுவலர் சரவணன், மற்றும் காகித ஆலையின் துறை சார்ந்த அலுவலர்கள், தீயணைப்புத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மீட்பு பணி உபகரணங்களை மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன் முன்னிலையில் காகித ஆலை நிறுவன முதன்மை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார் வழங்கிய போது எடுத்த படம்.